1982 பிப்ரவரி 16]

திரு. எம். ஆறுமுகம்: அதேபோல் சின்கோனாவிலிருந்து குடும்பக் கட்டுப்பாட்டிற்கான மருந்துகளும் தயாரிக்கப் படுகின்றன. எனவே கூட்டுறவுத் துறையில் அம்மாதிரி தொழில்கள் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: என்னிடம் தற்போது இதுபற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தமிழ்நாட்டிலே, ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் மருந்து உற்பத்திக்காக தனியாக ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தத் தொழிற்பேட்டையில் தனியாரிட மிருந்து எவ்வளவு தொகை பங்காக ஏற்க அனுமதிக்கப் பட்டுள்ளது? அரசு எந்தெந்த வகைகளில் இதில் முதலீடு செய் கிறது? எவ்வளவு பங்கு மூலதனத்தில் இதை ஏற்பாடு செய்ய அரசு தீர்மானித்திருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஏற்கெனவே நான் விவரமாக பதில் அளித்திருக்கிறேன். ரூ. 48 இலட்சம் அரசாங்கம் இதற்காக தொழிற்கூடங்கள் அமைக்க ஒதுக்கியிருக்கிறது. 83 பேர்கள் ரூ. 2000 என்றளவில் அவர்கள் முன்பணம் கொடுத் திருக்கிறார்கள். தொடர்ந்து பலரும் விண்ணப்பித்துக் கொண் டிருக்கிறார்கள். ஏறத்தாழ முதல் கட்டமாக 100 பேர்களுக்கு ஒதுக்கப்பட முடிவெடுத்திருக்கிறது. இதனால் அந்தத் தொழிற் பேட்டையில் ஏறத்தாழ பத்து கோடி ரூபாய் மூலதனம் அங்கே வர இருக்கிறது.

திரு. என். வரதராஜன்: மருந்து உத்பத்திக்காக தொழிற் பேட்டை என்பது சிறப்பானதுதான். ஆனால் நம் நாட்டில் இன்று மருந்து உற்பத்தித் தொழிலில் ஏகபோக உரிமையாளர்கள் ஒரு சிலர்தான் அதிக ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்று ரிப்போர்ட் இருக்கிறது. ஆகவே இந்தத் தொழிற்பேட்டையில் இடம் பெறுகிறவர்கள் நடுத்தரத் தொழில் செய்கிறவர்களுக்கு இடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: முதல் கட்டமாக சிறிய அளவில் உற்பத்தி செய்கிற ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸில் உள்ள அந்தத் தொழில் முனைவர்களுக்குத் தான் இந்த முயற்சி. ஸிப்காட் மூலம் நடுத்தர, பெரிய தொழிற் கூடங்களுக்கு நாம் திட்டமிட்டு அதைச் செய்ய இருக்கிறோம்.

சென்னை மிருகக்காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றும் திட்டம்.

*வினா எண் 185 திரு. இ. கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னை மிருகக்காட்சி சாலையை தாம்பரத்திற்கு அருகில் உள்ள வண்டலூருக்கு மாற்றப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எப்போது மாற்றப்படும்?

(இ) யார் பராமரிப்பில் இயங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) 31-3-1982-க்குள் மாற்றப்படும்.

(இ) வனத்துறையின் பராமரிப்பில் இயங்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: 31-3-82க்குள் மாற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை மாற்றுவதற்கான காரணங்கள் என்ன? அதனால் என்ன பலன் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இது ஏன் மாற்றப் படுகிறது என்பதற்கு இந்த அவையிலே பலமுறை பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே மூர்மார்க்கட்டுக்கு அருகில் உள்ள அந்த வன விலங்குப் பகுதி மத்திய ரெயில்வே விஸ்தரிப்புத் திட்டத்தையொட்டி அந்த இடத்தை அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு விட்டதும் இயற்கைச் சூழ்நிலை அங்குள்ள மிருகங்களுக்கு ஒத்துவராத நிலையிலும் நீண்ட காலமாக அதை மாற்றவேண்டுமென்று கருத்தை யொட்டியும் நல்ல சுற்றுப்புற சூழ்நிலையில் உள்ள இடத்திற்கு அந்த மிருகங்களை மாற்றவேண்டும் என்ற முடிவு எடுக்கப் பட்டது. அதையொட்டித்தான் வண்டலூர் பகுதியில் இந்த விலங்ககம் அமைக்கப்படும் திட்டம் உருவாகி இப்போது நிறை வேற்றப்பட்டு வருகிறது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூர் மார்க்கட்டுக்கு அருகிலுள்ள மிருகக்காட்சிசாலை, சுற்றுப்புற சூழ்நிலை சரியாக இல்லாததால் வண்டலூருக்கு மாற்றப்படுவ தாகச் சொன்னார்கள். அப்படி மாற்றப்படுகிற நேரத்தில் இப்போது மிருகக்காட்சிசாலையில் உள்ள மிருகங்கள் பழமை யானவையாக இருக்கின்ற காரணத்தால் புதிய மிருகங்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்து புதிதாக அமைக்கப்பட இருக்கிற மிருகக்காட்சி சாலையில் அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இப்போது அமைக்கப் படுகிற அந்த விலங்ககம், காட்சிசாலை உலகத்தரத்திலே ஒன்றாக அமையவேண்டும் என்ற கருத்தில் அது அமைக்கப் படுகிறது. ஆகவே அங்கே பல்வேறு மிருகங்கள், பறவைகள் நீர்வாழ் இனங்கள் எல்லாம், புதிய பறவைகளாக, மிருகங்களாகக் கொண்டு வந்து அங்கே வளர்க்கப்படும். அந்தத் திட்டமும் அதில் இணைக்கப்பட்டிருக்கிறது.

1932 பிப்ரவரி 16]

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இருந்து சிறிது தூரத்தில் அமைக்கப்பட இருக்கின்ற இந்த மிருகக் காட்சிசாலை, தென் ஆப்பிரிக்காவிலே கூபேர்ட்ஸ் நேஷனல் பார்க்கில் இருப்பதுபோல் இயற்கையாக அந்த மிருகங்கள் பழகக்கூடிய வகையில் பார்ப்பவர்களுக்கு ஏற்றவாறு அமைக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இதைத்தான் முன்னாலே சொன்ன பதிவிலேயே குறிப்பிட்டேன். ஆப்பிரிக்கா கண்டத்தில், அந்த நாடுகளில் இருக்கின்ற மிருகக்காட்சிசாலைகளை ஒட்டிய அளவிலேதான், இந்த மிருகக்காட்சி சாலையும் அமைக்கப்பட இருக்கிறது. அதனாலேதான், கிட்டதட்ட 800 ஏக்கர் நிலப் பரப்பு அங்கே ஆர்ஜிதம் செய்யப்பட்டு, இந்த விலங்ககம் அமைக்கப்பட்டு வருகிறது.

திரு, ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வண்டலூரில் அமைக்கப்பட இருக்கின்ற இந்த மிருகக் காட்சிசாலையைக் காண்பதற்கு பஸ் போக்குவரத்து வசதி, மற்றும் எலக்ட்ரிக் டிரெயின் வசதிகள் செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதே அந்தப் பகுதிவரை மின்சார ரயில் போய்க்கொண்டிருக்கிறது. நகர பேருந்துகளும் போய்க்கொண்டிருக்கின்றன. பின்னாலே, அங்கேவிலங்ககம் உருவாக்கியதற்குப் பிறகு. தேவைப்படுகின்ற அளவிற்கு இயற்கையாகவே அந்த வசதிகள் அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதிகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, புதியதாக் அமைக்கப்பட இருக்கின்ற மிருகக்காட்சி சாலைக்கு புதிய மிருகங்களும், பறவைகளும் வரயிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அண்மையில் பத்திரிகையில் பார்த்தேன். அஸ்ஸாம் மாநிலத்திலே உள்ள காண்டாமிருகங்களை பிற மாநிலங்களுக்கு மாற்றச் சொல்லியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அப்படி மாற்றுகின்றபோது, அந்த மிருகங்களை நம் மாநிலத்திலே அமைக்கப்பட இருக்கின்ற மிருகக் காட்சி சாலைக்கு கொண்டு வருவதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பதிலைத்தான் முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். புதிய மிருகங்கள் அல்லது பறவைகள் கொண்டு வருகின்ற திட்டத்திலே, இதுபோனற அந்தக் கருத்துக்களும் அடங்கியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 16

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிருகக்காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றுவதன் காரணமாக, அரசுக்கு ஏற்படக்கூடிய செலவு என்ன இதை ஈடுசெய்ய மத்திய அரசிடமிருந்தோ அல்லது ரயில்வே துறையிடமிருந்தோ ஏதாவது ஈடுதொகை பெறப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நீண்டகாலமாகவே மூர் மார்க்கெட் அருகில் இருக்கின்ற இந்த மிருகக்காட்சிசாலையை மாற்ற வேண்டு மென்று சென்னை மாநகராட்சியிடம் திட்டமிருந்தது. அரசிடமும்திட்டமிருந்தது. பொது மக்களும் அதை வற்புறுத்தி கொண்டு வந்தார்கள். நல்ல வேளையாக, ரயில்வே துறையினர் அந்த இடத்தை வேண்டுமென்று கேட்டதனால், அந்த நிலத் திற்கு அவர்கள் நஷ்ட ஈடுதொகையை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த மிருகக்காட்சிசாலையை மாற்றுவதற்கென தனியாக தொகை அவர்கள் வழங்கவில்லை.

1979 முதல் 1981 வரை தமிழ்நாடு அரசு தயாரித்த செய்திப்படங்கள்

*வினா எண் 186—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு 1979–1980, 1980-1981-ல் எத்தனை செய்திப்படங்கள் எவ்வளவு செலவில் தயாரித்து வெளியிடப்பட்டன?

(ஆ) 1981–82-ல் எத்தனை படங்கள் தயாரிக்க உத்தேசம்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) 1979-80, 1980-81 ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட படங்கள் செலவழிக்கப்பட்ட தொகை பற்றிய விவரங்கள்:

ஆண்டு.	படம்.	எண்ணிக்கை.	செலவழிக்கப்பட்ட தொகை.
1979–80	செய்திப்படங்கள்	14	ரூ. 11,48,600.00
	விளக்கப்படங்கள்	6	ரூ. 1,57,623.20
1980–81	செய்திப்படங்கள்	13	ரூ. 9,49,600.00
	விளக்கப்படங்கள்	2	ரூ. 82,768.37